# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 71/மா/2017/

ஆணை எண்: 219/2017

நாள்: 29/08/2017

05.04.2017 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி

முறைமன்ற நடுவத்தால் தாமாக முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
அடையாறு மண்டலம்,
மண்டலம் -13, சென்னை மாநகராட்சி.

எதிர்மனுதாரர்

ஆணை

05.04.2017 நாளைய தினமலர் நாளிதழில் "விளையாட்டுத் திடலை பராமரிக்கும் பகுதிவாசிகள்" எனும் குறுந்தலைப்பில் சென்னை மாநகராட்சி அடையாறு மண்டலம் குறித்து வரப்பெற்ற செய்தியினை 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7ன்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2) இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மனு எண். 71/2017/மா நாள்:06.04.2017ல் மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான உண்மை நிலை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதில் உரையை தொடர்புடைய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க அடையாறு மண்டலம் -13ன் மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

3) சென்னை மாநகராட்சி கோட்டம் –177, வேளச்சேரி, அம்பேத்கர் நகரில் உள்ள விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சி கூடம் பராமரிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது என்று சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் -13ன் மண்டல அலுவலர் கடிதம் எண். 177/5693/17 நாள்:11.08.2017ல் சமர்ப்பித்துள்ளார். மேலும், 13வது மண்டல அலுவலர் சமர்ப்பித்துள்ள டாக்டர் அம்பேத்கர் நகர் நண்பர்கள் பொது நலச் சங்க கடிதத்தின் வாயிலாக, 1வது பிரதான சாலையில் உள்ள விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தில் மாநகராட்சி அலுவலர் உதவியுடன் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள சிறு பழுதினை சீர் செய்துள்ளதாகவும், உடற்பயிற்சிக் கூடமும், சிறுவர் விளையாட்டுத் திடலும் சிறப்பாக இயங்கி வருவதாக மண்டல அலுவலர் அறிக்கை மூலம் தெரிய வருகின்றது.

4) எனவே, இந்நேர்வில் மேற்குறிப்பிட்ட சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், 171வது வார்டு வேளச்சேரி டாக்டர் அம்பேத்கர் நகர் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் பழுதினை நீக்கி நன்முறையில் செயல்பட்டு வருவதாகத் தெரிய வருவதால் ,அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை நிறைவு செய்து ஆணையிடப்படுகிறது.

2017–ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது,

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
செயலாளர்

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் -13,
சென்னை மாநகராட்சி,
115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,
அடையாறு, சென்னை - 600 020.

30/8/17

31/8/17

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்.
பேரூராட்சிப் பிரிவு – 3.

இருப்புக் கோப்பு, உதிரி -2